செ.வெ.எண்: 40 / ஆகஸ்ட் /2019 நாள்: 18.08.2019

திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி அருகில் உள்ள பேரூர் ,கட்டப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த 17 நபர்கள் டாட்டா ஏசி வாகனத்தில் எஸ்.என்.புதுார் கோயிலுக்கு செல்லும்பொழுது டிரைவர் கட்டுப்பாடு இல்லாமல் வேகமாக வாகனத்தை இயக்கி உள்ளார். இதனால் சாலையின் அருகே உள்ள கிணற்றில் வாகனம் விழுந்ததில் 8 நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் காயமடைந்த 9 நபர்களில் ஒருவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.காயமடைந்த 8 நபர்கள் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தகவல் கிடைத்த உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.08.2019)உடனடியாக விபத்து நடந்த இடத்திற்கு சென்று நேரில் பார்வையிட்டு கிணற்றில் விழுந்துள்ள நபர்களை காவல்துறை, மற்றும் தீயணைப்புத்துறையினரின் உதவியுடன் காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் உடல்களை கயிற்றினால் கட்டி மேலே கொண்டுவரப்பட்டு காயமடைந்தவர்களை சிகிச்சைக்காகவும் இறந்தவர்களின் உடல்களை பிரேத பரிசோதனைக்காக துறையூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

மேலும் துறையூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் அரசு மருத்துவமனை மருத்துவர்களிடம் உரிய சிகிச்சை அளிக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார். மேலும் இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் வறுமை நிலையில் இருப்பதால் அவர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதி வழங்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து நடந்த இடத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜியாவுல் ஹக் ,இ.கா.ப. அவர்கள். மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. மு.பரமேஸ்வரி, வருவாய்கோட்டாட்சியர் திரு.ரவிச்சந்திரன், இணைஇயக்குனர் (குடும்ப நலம்)திருமதி.சம்சாத்பேகம் ,துறையூர் வட்டாட்சியர் திரு.எஸ்.சத்தியநாராயணன், மற்றும் பலர் உடன் உள்ளனர்.